Registered as - Newspaper

சுவைமிக்க உஸ்வத்தை
கண்டோஸ் தயாரிப்பு
களுக்கு விஜயம் செய்யுங்கள்
பெட்டா
எசன்ஸ்
சப்பிளையர்ஸ்
333, நாவலர் ரோட்,
யாழ்ப்பாணம்.

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை
ரூ. 1-25

சிறு கைத்தொழில்களுக்கு
ஏற்ற மூலப்பொருள்களை
மலிவாகப்
பெற்றுக்கொள்ள
யாழ் நகரில் முதன்மை
வகிக்கும் ஸ்தாபனம்
பெட்டா
எசன்ஸ்
சப்பிளையர்ஸ்
333, நாவலர் ரோட்,
யாழ்ப்பாணம்.

கபர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஹு ஆடி மீ 22 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1407 துல்ஹஜ் பிறை 11 (07 – 08 – 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 217

## உயர்ந்த சிந்தனையோடு பயன்கருதா பணிசெய்த முன்னோடி அமரர் சண்முகம்

பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு சிறந்த அணிகலமாகும்; என்பது வள்ளுவர் வாக்கு.

சான்றோர் காட்டிய வழி நின்று உயர்ந்த இலட்சியங்களைக் கடைப்பிடித்து வாழ்பவர்கள் என்றும் மக்கள் மனதில் நிலையான இடத்தைப் பெற்றுக் கொள்வார்கள் என்பது திண்ணம். திரிகரண சுத்தியோடு வாழ்பவர்கள் பிறர் நலன் கருதிப் பணி செய்பவர்கள், சீரிய நெறியைக் கடைப்பிடித்து ஒழுகுபவர்கள் என்றும் மக்களால் போற்றப்படுவார்கள். அவர்களைப் புகழ் வந்துசேரும் என்பதற்கு அமரர் கணபதிப்பிள்ளை சண்முகம் ஓர் எடுத்துக் காட்டாவார். பதவிகளால், பணத்தால், அதிகார பலத்தால் சாதிக்க முடியாத கருமங்களை அன்பாலும் நற்பண்புகளாலும் சாதிக்க முடியும் என்பதை நடைமுறைப் படுத்தியவர் அமரர் சண்முகம் அவர்கள். அவர் இறைவனடி எய்தி இன்றோடு இரண்டு வருடங்கள் பூர்த்தியாகின்றன. அவர் வானுலகு உறைந்தபோதும் புகழ் பூவுலகில் பரந்து நிற்கிறது. அவர் பலராலும் நினைவு கூரப்படுகிறார்.

தமிழ்ப் பண்பாட்டையும், சமய ஈடுபாட்டையும் எடுத்துக்காட்டும் தோற்றம், அமைதியான அதே சமயம் உறுதியான இனிமையான பேச்சு, பிறரைத் தன்வசப்படுத்தும் அபார அன்பு, குற்றம் நீக்கிக் குணம் கண்டு மகிழும் தன்மை, நீதி நியாயத்திற்குக் கட்டுப்பட்டு வாழ்தல் என்பன அவரிடம் காணப்பட்ட சிறப்பியல்புகளாகும்.

செல்வத்தால் செருக்கடையாமலும், புகழால் பெருமிதம்கொள்ளாமலும் வாழ்ந்த பெருமை அன்னாருக்கு உரியது. ''என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற அப்பர் சுவாமிகளுடைய கோட்பாட்டை தனது வாழ்க்கையிலே இறுதிவரை கடைப்பிடித்தார். பயன்கருதாது பணியாற்றி, ஒழுக்கம், கட்டுப்பாடு என்பவற்றைக் கடைப்பிடித்து எளிமையான, அதே சமயம் உயர்ந்த சிந்தனையோடு வாழ்ந்து, ஏனையோருக்கு ஒருமுன்னோடியாகத் திகழ்ந்தார்.

திருமகள் கடாட்சம் நிரம்பப்பெற்ற அமரர் சண்முகம் அவர்கள் தன்னாலே முடிந்தவகைகளில் எல்லாம் அறப்பணிகளை மேற்கொண்டார். ஒருவர் வாழ்க்கையிலே செய்யத்தக்க செயல் அறம் என்பது பெரியோர் கூற்று. அதிக ஊக்கமுடையவராக செயற்பட்டு மிதமிஞ்சிய ஆக்கத்தைத் தேடி, அதன் மூலம் அறப்பணியாற்றி இன்புற்றார். 'செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்' என்பதற்கேற்பப் பலருக்கு உண்டியும், உடையும், உறையுளும் வழங்கி மகிழ்ந்ததோடு அவர்களுக்கு உயர்கல்வி வசதி, தொழில் வாய்ப்பு, திருமணப்பேறு என்பன உரிய காலத்தில் கிடைக்க வழிவகுத்துள்ளார். ஆதரவற்றவர்களும், இன்னல்பட்டவர்களும் அவருடைய ஆதரவைப் பெறத் தவறவில்லை.

''பேரறிஞர் தாக்கும்
பிறர்துயரத் தாங்கியே
வீரமொடு காக்க
விரைகுவர் - நேரிழாய்
மெய்சென்று தாக்கும்
வியன் கோல் அடிதன்
மேற்
கைசென்று தாங்குங்
கடிது
—நன்னெறி.

மேற்சொன்ன பாடல் அன்னாருடைய கொடைத்திறனை விளக்கும் முறையில் அமைந்துள்ளது. மேலும் அன்னாருடைய அறச் சிந்தனை, செயல் என்பன சொல்லும் தரமன்று. அன்னாருடைய வாழ்க்கை,

''ஈதல் இசைபட
வாழ்தல் அதுவல்
[லது
ஊதியம் இல்லை
உயிர்க்கு''

என்ற திருவள்ளுவர் கருத்துக்கு ஏற்ப அமைந்திருந்தது.

அமரர் சண்முகம் அவர்கள் விரிவான, பரந்த பொருளாதார நோக்குடையவராகக் காணப்பட்டார். விவசாயம், தொழில், நிதி, பத்திரிகை ஆகிய துறைகளில் ஈடுபட்டு மக்களுக்கு நல்வாழ்வு நல்க விரும்பினார். நல்ல எண்ணங்கள் வீண் போவதில்லை என்பதற்கேற்ப அவை இன்று செயற்படத் தொடங்கியுள்ளன. நாட்டின் வளத்தைப் பெருக்கி பலருக்குத் தொழில் வாய்ப்பை ஏற்படுத்தி அவர்கள் சுபீட்சமாக வாழ பல திட்டங்களை வகுத்து செயற்படுத்தியுள்ளார்.

வர்த்தகம், விவசாயம், கைத்தொழில் என்பவற்றுக்கு தேவையான நிதி ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கும் நோக்குடன் ''ஷப்ரு'' என்ற நிதி நிறுவனத்தை அமைத்த பெருமை அன்னாருக்குரியது. தமிழ் மொழியையும் கலாசாரத்தையும், பேணி வளர்க்க நாளிதழ் ஒன்றை நடத்த வேண்டும் என்ற விருப்பம் உதயன்–சஞ்சீவி மூலம் நிறைவு பெற்றது.

சங்கானை மஞ்சள் மணி அம்பாள் ஆலய அறங்காவலர் குழு உறுப்பினராகவிளங்கி, ஆலயத் திருப்பணிக்கு வரையாது வழங்கி, ஆலயம் புதுப்பொலிவுடன் விளங்க அன்னார் ஆற்றிய தொண்டு சொல்லும் தரமன்று. அமரர் சண்முகம் தொடக்கி வைத்த அரும் பணிகளைச் சிரம் மேற்தாங்கி அவர் வழி நின்று அன்னார் துணைவியாரும், புதல்வனும் கருமமாற்றுகிறார்கள். அமரர் சண்முகம் அவர்களின் புகழை எடுத்துக் காட்டும் அழியாச் சின்னங்களாக 'ஷப்ரு' நிதி நிறுவனமும், உதயன்–சஞ்சீவி பத்திரிகை நிறுவனமும் விளங்குகின்றன.



அமரர் க. சண்முகம்

-- க. திருச்சிற்றம்பலம் --

ஆயுதங்கள் கையளிப்பு;அமைதிப்படை கண்காணிப்பு; ஆனால்

# ஸ்ரீலங்கா அரச படைகள் நயினாதீவில் அட்டகாசம்!

## பயணிகள் மீது தாக்கு; முகாமும் விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 7

தமிழ்ப் போராளிகள் ஆயுதங்களைக் கையளிக்கிறார்கள். இந்திய அமைதிப் படை அமைதியை நிலைநாட்ட முனைகிறது. ஆனால் ஸ்ரீலங்கா அரச படையினர் நயினாதீவில் தங்கள் முகாமை விஸ்தரித்து, அட்டகாசம் புரிகின்றனர்.

வடபகுதியில் உள்ளரால் பொறுப்பேற்கப்பட்டு வரும் இவ்வேளையில், நயினாதீவு இராணுவ முகாம் மட்டும் ஸ்ரீலங்கா படையினரால் விஸ்தரிக்கப்பட்டு, பலப்படுத்தப்பட்டு வருகிறது. அங்கு ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் அட்டகாசம்நீடித்துவருவதாகவும் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் முகாம்கள் பல இந்திய இராணுவத்தின

நயினாதீவு பௌத்த கோயிலின் இறங்குதுறை புதுப்பிக்கப்பட்டிருப்பதுடன் முகாம் இறங்குதுறையில் பயணிகள் மீதான சோதனைகளும் கடுமையாக்கப் பட்டிருக்கின்றன சில சந்தர்ப்பங்களில் ஸ்ரீலங்காப் படை

(4 ஆம் பக்கம் பார்க்க)

### மீனவர் படகு மீது தாக்குதல்

குருநகர், ஆக. 7

நயினாதீவு கடல் எல்லையில் வைத்து கடற்படையால் மீனவர் படகு ஒன்று தாக்கப்பட்டதாகத்தெரிவிக்கப்படுகிறது.

புதன்கிழமை இச்சம்பவம் நடந்தது.

குருநகரைச் சேர்ந்த வீரக்கோன் என்பவரது மீன்பிடி இயந்திரப் படகே தாக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாபப் படகை துரத்திப் பிடித்த கடற்படையினர் படகில் இருந்த மூன்று தொழிலாளர்களையும் தாக்கி, படகில் இருந்த கொம்பாஸ், டீசல் போன்ற பொருள்களையும் பறிமுதல் செய்தனராம்.

(இ-51)

### சுபநேரம்

7-8-1987
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:-
06.04 முதல் 07.34 வரை
ராகுகாலம்:-
10 34 முதல் 12.04 வரை
இவை பகலுக்கும்
இரவுக்கும் பொருந்தும்
பிரதோஷ விரதம்
வரலக்ஷ்மி விரதம்

## பூஸாக் கைதிகள் இன்றுமுதல் விடுதலை

கொழும்பு, ஆக 7

பூஸாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான உத்தரவுகளை அரசாங்கம்அனுப்பி விட்டது

அங்கு தடுத்துவைக்கப் பட்டுள்ளவர்கள் ஐந்நூறு ஐந்நூறு பேரா விடுவிக்கப்படுவர்.

முதலாவது தொகுதிய ஐந்நூறு பேர் சப் பல்லூலப இன்று வெள்ளி பட பகுதிக்கு அனுப்பி வைக்கப்படுவர்

போக்குவரத்து வசதியைப் பொறுத்து ஏனையோரும் விடுதலை செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்படுவர்.

முதலில் 800 பேரை விடுவிக்கும் உத்தரவே

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்காவற்றுறையில் ஆயுதம் எதுவும் ஒப்படைப்பு இல்லை

### இந்திய இராணுவ அதிகாரிகள் சென்று திரும்பினர்

வேலணை, ஆக 7

தமிழ்ப் போராளிகளிடமிருந்து ஆயுதங்களைப் பொறுப்பேற்பதற்காக புதன்கிழமை மாலை இந்திய இராணுவ அதிகாரிகள் யாழ்ப்பாணம் — பண்ணை வீதி வழியாக ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையை வந்தடைந்தனர்.

கப்டன் பிஸ்ற் தலைமையில் பத்து இராணுவத்தினர் வந்திருந்தனர். நேற்று நண்பகல் வரை இவர்களிடம் ஆயுதம் எதுவும் போராளிகளால் ஒப்படைக்கப்படவில்லை.

இதற்கிடையில் பண்ணை — யாழ் வீதியில் உள்ள கண்ணி வெடிகள் யாவும் அகற்றப்பட்டு விட்டன என்றும் இவ் வீதியினூடாக பொதுமக்கள் சைக்கிள், மோட்டார்சைக்கிள் ஆகியவற்றில் பிரயாணம் செய்யலாம் எனவும் கப்டன் பிஸ்ற் தெரிவித்தார்.

கண்ணி வெடியினால் இவ் வீதியில் இரு பாரிய கிடங்குகள் ஏற்பட்டுள்ளன என்றும் இவற்றில் ஒரு கிடங்கு மூடப்பட்டுள்ளதாகவும் மற்றைய கிடங்கு உடனடியாக மூடப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஓரிரு தினங்களில் பண்ணை வீதி வாகனப் போக்குவரத்துக்குத் திறக்கப்படும் என நம்பப்படுகின்றது (இ-167)

### ராஜீவ் - ஜே. ஆர். நேரடித் தொலைபேசி

கொழும்பு, ஆக 7

ஜனாதிபதி ஜெயவர்த்தனவும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் உடனுக்குடன்தொடர்பு கொள்ள நேரடித் தொலைபேசி இணைப்பு வசதி செய்யப்பட்டுள்ளது.

(இ-எ)

### அத்துலத்துக்கு இப்படியும் ஒரு விருப்பம்

கொழும்பு, ஆக 7

புலிகள் இயக்கம், ஈரோஸ் இயக்கம் ஆகியவற்றின் தலைவர்களைச் சந்தித்து மனந்திறந்து பேச விரும்புகின்றாராம தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி

கொழும்புச் செய்தியாளர் ஒருவரிடம் அமைச்சர் இத் தகவலை

(4ஆம் பக்கம் பார்க்க)

## நிராயுதபாணிகள் மீது ஸ்ரீ லங்கா படை தாக்கு!

### ஞாயிறன்று ஆட்சேப ஹர்த்தால்

யாழ்ப்பாணம், ஆக. 7

நிராயுத பாணிகளான போராளிகள் ஸ்ரீலங்கா படைகளால் சித்திரவதை: அதனை ஆட்சேபித்து எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வடக்கு-கிழக்கில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப் படும்.

நிராயுதபாணிகளாகச் சென்ற ஈரோஸ் இயக்கப் போராளிகள் இருவர் ஸ்ரீலங்கா படையினரால் சித்திரவதை செய்யப்பட்டதாகத் தெரிவித்து அதனைக் கண்டித்தும், அத்தகைய சம்பவங்கள் தொடரப்படாமல் இருக்கும் வகையிலும்–

அந்த இருவர் நிலை குறித்து ஸ்ரீலங்காபடையினர் தீர்க்கமான முடிவினைத் தெரிவிக்க நிர்ப்பந்திக்கும் வகையிலும்– எதிர்வரும் ஞாயிறு (9 ஆம் திகதி) வடக்கு-கிழக்கு மாகாணங்களில் ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு ஈரோஸ் அமை

(4ஆம் பக்கம் பார்க்க)

### இந்தியத் துருப்புகள் ரோந்து அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 7

யாழ் நகர வீதிகளில் இந்தியஇராணுவத்தினர் தற்பொழுது அடிக்கடி ரோந்து புரியத் தொடங்கியுள்ளனர்.

கடைகளிலும், சந்தைப் பகுதிகளிலும் இந்திய இராணுவத்தினர் கூடி நிற்கின்றனர்.

மக்கள் கூட்டம் இவர்களை முடிவண்டியடித்துக் கொண்டு பார்வையிடுகிறது.

இந்திய இராணுவத்தினரின் வருகையை அடுத்து யாழ்ப்பாணம் தற்பொழுது வழமை நிலைக்குத் திரும்பியுள்ளது. போக்குவரத்துக்களும் யாழ் பஸ் நிலையத்தில் இருந்து வழமை போல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (இ-10)

### முச்சந்தி முரளி



போறனுங்கள் தானே செல்லங்கொட்டிப் போட்டுப் போவோம் எண்டு நிலைச்சுத் தான் நிராயுதபாணியளிலைகை வைக்கினமோ. உது சரி வராது. அமைதியையும் கொண்டு வராது.

லங்கா சிமெந்து லிமிட்டெட்
Lanka Cement Ld
அறிவித்தல்

சகல ஆலை ஊழியர்களும் துறைமுக ஊழியர்களும் இன்று (7.8.87) வெள்ளிக்கிழமை காலை 9-00 மணியளவில் எமது பிரதான வாயிலில் சமுகமளிக்கவும்.

பிரதிப் பொது முகாமையாளர்
லங்கா சிமெந்து லிமிட்டெட்,
கீரிமலை வீதி, காங்கேசன்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சின்னஞ்சிறு விளம்பரம் ★

**தேவை**

தனியார் வைத்திய நிலையத்தில் வேலைசெய்வதற்கு ஓர் (R.M.P.)வைத்தியர் தேவை. உடனே தொடர்பு கொள்ளவும். ராஜ் டிஸ்பென்சறி, முல்லைத்தீவுவீதி, புதுக்குடியிருப்பு. (1400)

**தவறிவிட்டது**

65200/408V இலக்கமுடைய தம்பியப்பா உதயநாதன் 1/4C, விபுலானந்தா வீதி, வாழைச்சேனை என்ற அடையாள அட்டை 4ஆம் திகதி யாழ் பல்கலைக்கழக வளவினுள் அல்லது வீதியில் பேர்சுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 122, சிவன் கோவில் வீதி, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம் அல்லது யாழ். பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர் அலுவலகத்தில் தயவு செய்து ஒப்படைக்கவும். (1451)

**விற்பனைக்கு**

**Bairaha Farms Hisex** பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் **Hybro** புறொயிலர் குஞ்சுகள் 7-ஆம் திகதி வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும். சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி கொக்குவில். (1453)


● மீனவர்கள்

# பழைய தொழில் நிலையங்களைப் பிடிக்க போட்டி

குருநகர், ஆக. 7

மண்டைதீவு, சிறுத்தீவு, கழுவம்தீவு, குருசடித்தீவு, பண்ணை வீதி, கொட்டடிப் பகுதிகளில் முன்பு கடல் தொழிலில் ஈடுபட்டு வந்த மீனவர்களிடையே தமது பழைய தொழில்நிலைகளைப் பிடிப்பதில் போட்டிகள் ஏற்பட்டுள்ளன.

ஏற்கனவே தொழிலை இடைநடுவில் கைவிடப்பட்டவர்களின் நிலையங்களை (பாடுகளை) புதிதாக சென்றவர்கள் சொந்தமாக்கிக் கொள்ள முனைவதால் இரு சாராருக்கும் இடையில் தகராறுகளும் தோன்றியுள்ளன.

இவ்விடயத்தில் குருநகர் சிறுகுவலைத் தொழிற் சங்கம் தலையிட்டுப் பிணக்குகளைத் தீர்த்து வருகிறது. (உ-51)

## திருகோணமலையில் ஊர்வலம், குண்டுவெடிப்பு

திருகோணமலை, ஆக. 7

திருகோணமலைக் கச்சேரிக்கு ஊர்வலமாகச் சென்ற பெரும்பான்மை இனத்தவர்கள் கோஷ்டி ஒன்று பொலீஸாரினால் வழிமறிக்கப்பட்டு கலைக்கப்பட்டது.

இச்சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றது.

சுலோக அட்டைகளுடன் சுமார் 150 ஆண்கள், பெண்கள் இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

மணிக்கூண்டுக் கோபுரத்துக்கடியில் இருந்து இந்த ஊர்வலம் ஆரம்பமானது.

கோட்டை வாசலில் வைத்துப் பொலீஸார் ஊர்வலத்தைத் தடுத்து நிறுத்தினர்.

இதன் பின்னர் சில நிமிடங்கள் கழித்து திருமலை நகர எல்லைக்குள் இரண்டு குண்டுகள் வெடித்தன.

ஒரு குண்டு பௌத்த விகாரைப் பக்கமாக வெடித்தது. இரண்டாவது குண்டு கிருஷ்ணாத் தியேட்டர் பக்கம் இருந்து வெடித்தது. (அ-எ-150)

## இந்திய சிப்பாய் விபத்தில்

யாழ்ப்பாணம், ஆக. 7

இந்திய சிப்பாய் ஒருவர் கோட்டை முகாமுக்கு அருகில் மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கினார்.

விபத்துக்குள்ளான இவரின் பெயர் மோகன சூரியவன்சே. வயது 30.

இவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வீதியைக் கடந்த போது வீதி சீரின்மையால் இவர் விபத்தில் சிக்கினார் எனத் தெரிய வருகிறது. (ஒ-160)

## 60 தமிழர்கள் விடுதலை!

பலவத்த புனர்வாழ்வு முகாமில் இருந்து சென்ற 26, 27ஆம் திகதிகளில் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த 60 தமிழ் இளைஞர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் 1985இல் கைது செய்யப்பட்டவர்கள் ஆவர்.

திருமலை நகரம், அன்புவழிபுரம், பாலையூற்றுப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் இவர்கள்.


# பிரயாண ஒழுங்குகள்

★ சவூதி அரேபியா ★

i. எம்மிடம் கீழ்வரும் வேலைவாய்ப்புகள் உண்டு,

1. 21 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கு Labourers / Cleaners வேலை வாய்ப்பு வெற்றிடங்கள்

சம்பளம் 350-S.R

2. 25 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கு Maintenance Cleaners (பராமரிப்பு வேலையாளர்கள்)

சம்பளம் ரூ. 500-- .R

சாப்பாட்டு, இருப்பிட வசதியுடன் ஒருமாத காலத்துள் பயணம் மேற்கொள்ளலாம்.

ii. ஏற்கனவே விசா வந்தவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும் அத்துடன் ஈராக் நாட்டிற்கு பாஸ்போட் தந்தவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

iii. ★ புறூனே (BRUNEI) ★

18 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கு Cleaners (கிளீனேர்ஸ்) வேலைவாய்ப்பு வெற்றிடங்கள் உண்டு.

சம்பளம் 250 U.S டொலர்

(சாப்பாடு இருப்பிடவசதியுடன்)

உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்

● மேலதிக விபரங்களுக்கு உடனடியாகத் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

★ T.இந்திரநாதன் ★

(EVER - REST)

96, கச்சேரி நல்லூர் வீதி,

யாழ்ப்பாணம்.

(முத்திரைச் சந்திக்கு அருகாமையில்)


மக்கள் முகம்

### வட்டு - இந்து பாடசாலை அபி. சங்கம்

வட்டுக்கோட்டை, ஆகஸ்ட் 7

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்க புது வருட நிர்வாகிகள் வருமாறு:-

தலைவர்:- திரு. நா. வேலுப்பிள்ளை (அதிபர்)

உபதலைவர்கள்: திரு ப. சர்வேஸ்வர ஐயர், திரு. ச. குலசூரியன், திரு. வே. தம்பையா.

செயலாளர்:- சைவப் புலவர் திரு. நா. க. தங்கரத்தினம். உபசெயலாளர்:- திரு. பொன். தெண்டாயுதபாணி.

பொருளாளர்:- திரு என். எஸ். கந்தசாமி.

கணக்கு பரிசோதகர்கள்:- திரு. ச. அரியகுட்டி, திரு. ச. இராமலிங்கம்.

நிர்வாகசபை உறுப்பினர்கள்:- திரு. மு. தர்மதாசன், திரு. செ. பரராசசேகரம், திரு. த. இளையதம்பி, திரு. வே. அமலநாதன், திரு. க. செல்வரத்தினம், திரு. நா. பேரம்பலம், திரு. சி. சிவலிங்கம், திரு. த. செல்வராசா, திரு. எஸ். ஆறுமுகசாமி, திருமதி அம்பலவாணர், திரு. வ.யோகானந்தசிவம்.

# திருமலைத் தளத்தைப் பிடிக்க ஏகாதிபத்திய வாதிகள் திட்டம் போட்டிருந்தனராம்

மாஸ்கோ, ஆக. 6

இனப் பிரச்சினையைப் பயன்படுத்தி திருகோணமலைக் கடற்படைத் தளத்தை தம்வசப் படுத்த ஏகாதிபத்திய சக்திகள் திட்டமிட்டிருந்தன.

இதை இந்திய-இலங்கை ஒப்பந்தம் தடுத்து நிறுத்திவிட்டது.

இப்படி சோவியத் அரசு பத்திரிகை 'பிராவ்டா' கருத்து வெளியிட்டிருக்கின்றது.

புதிய ஒப்பந்தம் ஒரு மலைத் தளம் இன்னொரு நாட்டிடம் கையளிக்கப் படுவதைத் தடுக்கின்றது.

இனப்பிரச்சினை காரணமாக இலங்கை அரசு பல கஷ்டங்களை எதிர்நோக்கியது. அதை ஏகாதிபத்திய சக்திகள் பயன்படுத்த முயற்சித்து வந்தன.

இலங்கையில் இனி வெளிநாட்டுத் தலையீட்டுக்கு இடமில்லை—

இப்படி பிராவ்டா மேலும் கருத்து வெளியிட்டது. (ஒ-எ)

## பொறிவெடி: மேலும் மூவர் கால் இழப்பு

வடமராட்சி, ஆக. 7

வீடு பார்க்கச் சென்ற மேலும் மூவர் கண்ணி வெடியில் சிக்கி கால் இழந்தனர்.

ரி. சதீஸ்குமார் வயது 20 (வலதுகால்) குரும்பசிட்டி,

எஸ். ஞானக்குமார் வயது 21 (இடதுகால்) வீமன்காமம்,

சி. இளங்குமரன் வயது 20 (இடதுகால்)

ஆகியோரே இம் மூவரும் ஆவர்.

முழங்காலுக்குக் கீழ் சேதமான நிலையில் இவர்கள் யாழ் ஆஸ்பத்திரியில்சேர்க்கப்பட்டு அவர்களின் கால் பாகங்கள் அகற்றப்பட்டன. (இ-160)

அரசியலில் தலையிடாதீர்!

# மகாசங்கத்துக்கு அமைச்சர் அறிவுரை

கொழும்பு, ஆக. 7

அரசியலில் தலையிட வேண்டாம் என்று மகா சங்கத்துக்கு கலாசார அமைச்சர் ஈ. எல். பி. ஹுருள்ள வேண்டுகோள் விடுத்து இருக்கின்றார்.

இலங்கை வானொலி மூலம் இந்த வேண்டுகோளை அமைச்சர் விடுத்தார்.

''பௌத்த சாசனத்துக்கு விசுவாசமாக பணி புரியுங்கள்; பதவி ஆசை பிடித்த அரசியல்வாதிகளின் வழிநடத்தலுக்கு உட்பட்டு அரசியலுக்கு வராதீர்கள்''—

இப்படி அமைச்சர் தனது வேண்டுகோளில் மேலும் தெரிவித்தார். (ஒ-எ)

# வல்லிபுரப் பகுதியில் இந்திய இராணுவம் முகாம் அமைத்தது

பருத்தித்துறை, ஆக. 7

பருத்தித்துறை மருதங்கேணி பிரதான வீதியில் 3ஆம் கட்டையை அடுத்துள்ள வல்லிபுரக் கோவில் பகுதியில் இந்திய இராணுவம் புதிதாக முகாமிட்டுள்ளது.

இங்கு ஐந்நூறுக்கு மேற்பட்ட இராணுவ வீரர்களும், பீரங்கிகள், மோட்டார் ஷெல்கள் சகிதம் குவிக்கப்பட்டிருக்கின்றனர்.

விமானங்களைச் சுட்டு வீழ்த்தக்கூடிய நவீன கருவிகளும் முகாமில் இணைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

துருப்புக்கள் தற்காலிகமாக வல்லிபுரம் ஆழ்வார் ஆலய மடங்களில் தங்கியுள்ளனர். விரைவில் புதிய கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிகிறது. (உ-118)

# வீடுகள் திருத்த இந்தியாவிடம் உதவி

## அகதிகள் கேட்கின்றனர்

சென்னை, ஆக 7

சேதமடைந்த வீடுகளைப் பழுது பார்க்க இந்திய மத்திய அரசும் பொது சேவை நிறுவனங்களும் உதவ வேண்டும்.

தமிழ் நாட்டில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள்பி.ரி.ஐ. செய்தி ஸ்தாபனத்திடம் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இந்திய இராணுவம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முகாமிட்டிருப்பதால் பயப்படாமல் தாயகம் திரும்பவுள்ளோம் என்றும் அந்த அகதிகள் தெரிவித்தனர். (ஒ-எ)

# திருகோணமலை 'வெல்கம்' ஹோட்டலில் இராணுவம் புகுந்தது!

திருகோணமலை நகரில் உள்ள ''வெல்கம் ஹோட்டல்'' கடந்த 26ஆம் திகதி முதல் இராணுவ முகாமாக மாற்றப்பட்டது.

இந்த ஹோட்டல் அமைந்துள்ள பிரதேசத்தில் [illegible] கப்பட்டிருக்கின்றது.

ஹோட்டலில் உள்ள பணியாட்களை வெளியேறச் சொல்லிவிட்டு இராணுவ சிப்பாய்கள் அங்கு குடி புகுந்தனர்

இந்த ஹோட்டலில் நின்று பார்த்தால் திருகோணமலைத் துறைமுகப் [illegible] விடத்தக்கது. (அ-எ-150)

● ✶ ● **செய்திக்கொத்து** ● ✶ ●

## திருட்டு

யாழ்ப்பாணம், ஆக. 7

கடந்த சனிக்கிழமை பெரியகடையில் உள்ள ''கற்பகம்'' விற்பனை நிலையம் உடைக்கப்பட்டு பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன.

திருட்டுப்போன பொருள்களின் பெறுமதி சுமார் 2,195 ரூபா என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-160)

## 120பேர் கைது!

கொழும்பு ஆக. 7

கொழும்பில் கடந்த வாரம் இடம்பெற்ற வன்செயல்கள் தொடர்பாக பிரபல வர்த்தகர் உட்பட 120 பேர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு வடக்கில் உள்ள ஓர் அமைச்சரின் வீட்டைத் தாக்க முற்பட்ட கும்பலுக்கு இந்த வர்த்தகர் தலைமை வகித்தார் என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

## இன்று நல்லூரில்

யாழ்ப்பாணம் ஆக. 7

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தையொட்டி மேற்கு வீதியில் உள்ள பிள்ளையார் கோவில் மண்டபத்தில் சம்பூர்ண இராமாயணத் தொடர் விரிவுரை இன்று ஆரம்பமாகிறது.

இன்று மாலை 6.30 மணியளவில் 'இராமாவதாரம்' என்னும் பொருளில் பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மாவினால் விரிவுரை நிகழ்த்தப்படும். (இ)

## மீண்டும் விரிவுரை ஆரம்பம்

யாழ்ப்பாணம் ஆக,7

திறந்த பல்கலைக் கழக உயர் தொழில் ஆங்கிலப் பயிற்சி நெறிக்கான விரிவுரைகள் எதிர்வரும் 9ம் திகதி ஆரம்பமாகின்றன.

யாழ் பிராந்திய நிலையத்தில் ஆரம்பமாக இருக்கும் விரிவுரைகளில் மாணவர்களைக் கலந்து கொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## வீடுகளுக்குத் திரும்புகின்றனர்

குருநகர், ஆக. 7

குருநகர், தொடர்மாடி வீடுகளுக்குக் குடியிருப்பாளர்கள்பெருமளவில் திரும்பிக்கொண்டிருக்கிறார்கள்.

கடந்த மார்ச் மாதப் பிற்பகுதியில் மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட மூன்று ஷெல்களால் தொடர்மாடி வாசிகள் மூவர் கொல்லப்பட்டதுடன் ஐந்திற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்ததைத் தொடர்ந்து இப்பகுதியிலிருந்து பெரும்பாலான குடியிருப்பாளர்கள்வெளியேறி இருந்தனர்.

இப்பொழுது ஏற்பட்டு வருகின்ற அமைதி நிலைமையை அனுசரித்து பாதுகாப்புத் தேடிப் போயிருந்த தொடர்மாடி வீட்டுக்காரர் தத்தமது வீடுகளுக்குத் திரும்பிக்கொண்டிருக்கின்றனர். (அ-51)

## ரயில் நிலையங்கள் பலத்த சேதம்

கொழும்பு, ஆக 7

பாணந்துறையில் இருந்து மாத்தறை வரையில் உள்ள சகல ரயில்நிலையங்களும் கடந்த வாரம் இடம் பெற்ற வன்செயல்களில் சேதமாக்கப்பட்டன.

சில ரயில் நிலையங்கள் முற்றாக எரிக்கப்பட்டன. பெரும்பாலான சிலிப்பர் கட்டைகள் அகற்றப்பட்டுள்ளன.

கொழும்பு - மட்டக்களப்பு ரயில் பாதையில் பொலன்னறுவை ஹிங்குராக்கொட பகுதிகளில் ரயில்வே உடைமைகளுக்குபெரும் சேதம் ஏற்பட்டன. (உ-எ)

## ஒப்பந்தம் ஜனாதிபதிக்கு நிவாரணம்

சென்னை, ஆக.7

இந்திய- இலங்கை ஒப்பந்தம் இராணுவவல்லரசுகளின் நிர்ப்பந்தத்தில் இருந்து ஜனாதிபதி ஜெயவர்த்தனாவை விடுவித்துள்ளது.

இப்படி பிரதமர் ராஜீவ் காந்தி சொன்னார்.

புதுடில்லியில் தன்னைச் சந்தித்த முற்போக்கு எழுத்தாளர் தூதுக்குழுவிடம் முன்கண்ட தகவலை பிரதமர் வெளியிட்டார்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் அணிசேரா இயக்க வளர்ச்சியில் ஒரு மைல் கல்லாகும் என்றும் பிரதமர் வர்ணித்தார். (இ-எ)


07.08.87 வெள்ளிக்கிழமை தொடக்கம்

✶ மீண்டும் பழைய விலாசத்தில் ✶

**எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி**

(மருந்துகள், மருந்துச்சரக்குகள், வாசனதிகள், ஆயுள்வேத மருந்துகள் தயாரிப்பாளரும் விற்பனையாளரும்)

53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

கிளைகள் :-

34, ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

160, செட்டியார் தெரு, கொழும்பு - 11.

(3230)


**6 ஆம் மாத நினைவஞ்சலி**



**மலராகினி கமலநாதன்**

(மல்லிகா)

மலர்வு, 16.08.1959 — உதிர்வு: 11.02.1987

(பாவற்குளம் மகாவித்தியாலய ஆசிரியையும் பலாலி ஆசிரியபயிற்சிக்கலாசாலை விவசாயபீட இரண்டாம் வருட ஆசிரிய மாணவியும்)

அமைதியாய்த் துயின்ற
அன்பு மல்லிகாவே!
அன்பான உம் முகம்
அகல்வதற்கில்லை
நீர் அகால மரணம் அடைந்து
இன்று 178 ஆம் நாள் ஆயினும்
உம் நினைவுகள்
எம் நெஞ்சங்களை விட்டு
என்றும் நீங்காது — உம்
ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல
நயினை நாகபூஷணியம்மையை
பிரார்த்திக்கின்றோம்.

No. 23 V.C. குவாட்டர்ஸ், [illegible] — வே. கமலநாதன் (கணவர்) உறவினர்கள், [illegible] நயினாதீவு.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

பிறவிப்பயன் தெய்வதரிசனமாகும். இதை ஒரு பொழுதும் மறவாதே. இடையறுது அவருடைய அருளுக்காக முயற்சி செய்.

— சுவாமி சிவானந்தர்.

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805 22073
யாழ்ப்பாணம்.
07.8.1987 த.பெ.இல: - 23

# தமிழர் பொறுப்பு

ஈழத் தமிழர்களின் இன்றைய நிலை என்ன?

தமது தாயகத்தில் தம்மைத் தாமே ஆளவேண்டும் தமது வாழ்வையும் தலைவிதியையும் தாமே நிர்ணயிக்க வேண்டும் இவற்றுக்கு வகை செய்யவல்ல தனி ஆட்சி முறை வேண்டும். இந்த இலட்சியங்களை முன்வைத்து தமது பறிக்கப்பட்ட உரிமைகளை வென்றெடுப்பதற்காகப் போராடியவர்கள் தமிழர்கள்.

தமது இலட்சியத்தை அடையவேண்டும் என்ற வேட்கையில் பலவித கொடுமைகளுக்கு ஆளாகியவர்கள்; பல இழப்புக்களைக் கண்டவர்கள். எனினும் விடுதலை என்ற இலக்கை அடைவதற்காக, அவற்றைப் பொருட்படுத்தாமல் மன உறுதியுடன் போராடியவர்கள் தமிழர்கள்.

தவிர்க்க முடியாத சூழ்நிலையில், தடுக்க முடியாத பின்னணியில் இலக்கை அடைவதற்கு முன்னரே, இலட்சியத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கு முன்னரே ஆயுதப் போராட்டத்தை இடைநடுவில் நிறுத்திக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டுவிட்டது.

போராளிகள் தமது ஆயுதங்களைக் கையளித்ததோடு தமிழர் போராட்டம் முடிந்து விட்டதாகப் பலர் தப்பாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு தப்புக் கணக்குப் போடுபவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்கள். அதுவே மிகவும் கவலை தருகிறது. மனம் வேகிறது. உணர்வுகள் நோகின்றன.

போதும் என்ற மனமே பொன்செய்யும் மருந்து. பேராசை பெருந்தரித்திரம். ஆகையால் கிடைப்பதைப் பெற்றுக் கொண்டு, திருப்தி அடையவேண்டும் என்று இவர்கள் நியாயம் கற்பிக்கிறார்கள்.

அமைதியான சூழ்நிலையும், வாழ்க்கை வழமைக்குத் திரும்புவதும், இடைக்காலத் தீர்வும் தற்காலிகமானவை. அது ஒரு மாயமான் போன்றது.

கிடைக்கப்போகும் இடைக்காலத் தீர்வு தமிழர்களின் அபிலாஷைகளையும், இலட்சியங்களையும் எந்தளவுக்கு நிறைவேற்றும் என்பதை நடைமுறையில்தான் தெரிந்துகொள்ள வேண்டும்.

நிலைமை அப்படியிருக்கத் தமிழர்களின் அரசியல் போராட்டம் அல்லது விடுதலைப் போராட்டம் இத்துடன் தரித்து விட்டதாக நினைப்பது அல்லது கொள்வது மிகப் பெருந் தவறு.

கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக தமிழ் இனம் தனது உரிமைகளுக்காகவும், விடுதலைக்காகவும் போராடி, ஒப்பந்தங்கள் செய்து பெற்றது எதுவுமில்லை. இந்த ஒப்பந்தம் மட்டும் அப்படி என்ன பூரண சுதந்திரத்தை எமது தலையில பூத்தூவியா நிற்கிறது?

இதுவரை பட்ட கஷ்டங்களுக்கும், கொடுமைகளுக்கும் ஈடு கொடுக்க வல்லது முழுமையான சுதந்திரம் மட்டுமே ஆகும். அது ஒன்றே எமக்குப் பூரண வாழ்வளிக்கும் என்பதை ஒவ்வொரு தமிழனும் உணர வேண்டும்.

அரைகுறைத் தீர்வுகளுக்குள் அடைபட்டு நிற்கும் போக்கு, நாம் இதுவரை இழந்த எங்கள் சகல செல்வங்களுக்கும் ஈடுகொடுக்க வல்லதல்ல.

ஆயுதம் ஏந்திப் போராடுவது மட்டும் தான் போராட்டம் என்பதல்ல. காந்திஜி காட்டித் தந்த அகிம்சைப் போராட்டம் மட்டும் தான் போராட்டம் என்பதல்ல. மக்கள் போராட்டம் என்ற மகத்தான போராட்டம் ஒன்று உண்டு எந்த மாமலை போன்ற ஆட்சியையும் தூக்கி வீசக் கூடிய அபார சக்தி அதற்கு உண்டு.

நலிந்தவர்களுக்கு, மெலிந்தவர்களுக்கு உரிமைகளை இழந்தவர்களுக்குப் பக்க பலமாக இருப்பதும், வலுவூட்டுவதும் மக்கள் சக்தியே.

அந்த மக்கள் சக்தியை அடிக்கல்லாக வைத்துத் தமிழர்கள் தமது இலட்சியப் பயணத்தைத் தொடர வேண்டும். தேவைப்படும் வேளை எல்லாம் அதன் துணையை நாட வேண்டும். அப்படிச் செய்வதற்கு, பூரண சுதந்திரமே வேண்டும் என்ற மன உணர்வு எல்லாத் தமிழர்களுக்கும் அவசியம். இடைக்காலத் தீர்வுகளை கண்டு அந்த உணர்வை அழித்துக் கொள்ளக் கூடாது. ஒருமுறை அழித்து விட்டால் திரும்ப வளர்த்துக் கொள்வது மிகக் கஷ்டம்.

எமது எதிர்காலச் சந்ததிகளின் நன்மையைக் கருதியாவது பூரண சுதந்திரம் தேவை என்ற மன உணர்வையும், மன உறுதியையும் வளர்த்துக் கொள்வது ஈழத் தமிழர் ஒவ்வொருவரதும் தலையாய பொறுப்பாகும்.

## பணிப்பாளரைச் சந்தித்தனர்

யாழ்ப்பாணம், ஆக 7

யாழ் கோட்டை முகாம் இந்திய இராணுவ பொறுப்பதிகாரிகள் இருவர் யாழ் போதனா வைத்திய நிலையப் பணிப்பாளரைச் சந்தித்தனர்.

யாழ் ஆஸ்பத்திரிக்கு வந்த அவர்கள் வைத்தியர்களையும் சந்தித்து தற்போதைய நிலைகுறித்து உரையாற்றினர்.

(ஒ - 10)

★ நிக்கரகுவாவுக்கு சோவியத், மிக்

# அமெரிக்க அரசு கவலை

வாஷிங்டன், ஆக. 6

சோவியத் தயாரிப்பான 'மிக்' யுத்த விமானங்களை நிக்கரகுவா அரசு பெற்றுக்கொள்வது அமெரிக்காவுக்குக் கவலை அளித்து உள்ளதாம்.

அமெரிக்க ராஜாங்க அமைச்சுப் பேச்சாளர் சார்ள்ஸ் ரெட்மான் முன்கண்ட கவலையை வெளியிட்டார்

மிக் விமானங்களை வாங்கும் திட்டத்தை நிக்கரகுவா அரசு கைவிடவில்லை—என்று நிக்கரகுவா பாதுகாப்பு அமைச்சர் ஹம்பர்டோ ஒட்டேகா தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்தே அமெரிக்கா கவலை தெரிவித்தது. (இ-எ)

## ஈராக் வேண்டுகோள்

பக்தாத், ஆக. 6

மக்காச் சம்பவம் குறித்து ஈரான்மீது அரபு, முஸ்லிம் நாடுகள் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும்—

இப்படி ஈராக் வேண்டுகோள் விடுத்திருக்கின்றது.

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் தொலைபேசிமூலம் சவூதி அரேபிய மன்னர் பஹ்துடன் தொடர்புகொண்டு மக்காவில் ஈரான் யாத்திரீகர்கள் நடந்துகொண்ட விதத்தைக் கண்டிப்பதாகத்தெரிவித்தார். (இ-எ)

**வெளி உலகில்**

### கொமேனியை

## இஸ்லாமிய நாடுகளின் ஆத்மீகத் தலைவராக

### பிரகடனப்படுத்த முயற்சி

ரியாட், ஆக. 6

ஈரானிய ஆத்மீகத் தலைவர் ஆயதுல்லா கொமேனியை இஸ்லாமிய நாடுகளின் ஆத்மீகத் தலைவராகப் பிரகடனம் செய்யும் முயற்சியில் ஈரானியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

மேற்கண்டவாறு சவூதி அரசு அறிவித்துள்ளது.

இம் முயற்சியின் ஒரு கட்டமாகவே மக்கா சம்பவம் அமைந்துள்ளது என்றும் சவூதி அதிகாரிகள் தெரிவித்தனர்.

மக்கா புனித பள்ளி வாசலில் குழுமியிருந்த சுமார் ஒன்றரை லட்சம் யாத்ரீகர்கள் முன்னிலையில் இப்பிரகடனத்தைச் செய்ய ஈரானிய யாத்ரீகர்கள் முயற்சித்த போதே, பலர் உயிரிழந்தனர்.

இப்படி மக்கா சம்பவம் பற்றிய விசாரணையில் தகவல் வெளிவந்துள்ளது என்றும் சவூதி அரசு அதிகாரிகள் கூறினர். (இ-எ)

## சுட்டுக்கொலை!

பேரூட், ஆக. 6

லெபனன் ஜனாதிபதி அமின் ஜெமாயிலின் ஆலோசகரான முகமது ஸ்கீர் இனந் தெரியாத நபர்ஒருவரினல் அவரின் வீட்டில் வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை சுட்டுக்கொல்லப்பட்டார். (இ-எ)

ஹெய்டியில்

## எதிர்க்கட்சித் தலைவர் உயிருடன் எரிப்பு!

போர்ட்-ஆ-பிரின்ஸ், ஆக 6

ஹெய்டி நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர் ஆயுதம் தரித்த கோஷ்டி ஒன்றினல் உயிரோடு எரிக்கப்பட்டார்.

தலைநகரில் இருந்து 30 மைல் தொலைவில் உள்ள லியோகேனில் இச்சம்பவம் இடம் பெற்றது,

கொல்லப் பட்ட எதிர்க்கட்சித்தலைவரான லூயிஸ் அதிஸ் எதிர்வரும் நவம்பரில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிட இருந்தார்

மூன்று அரசியல் வாதிகளுடன் ஆலோசனை நடத்திக் கொண்டு இருந்த சமயம், ஆயுதம் தரித்த கோஷ்டி ஒன்று வீட்டினுள் புகுந்து இவரை வெளியே இழுத்து வந்தது

கம்யூனிஸ்ட் என்று அக்கோஷ்டி இவரைக் குற்றஞ்சாட்டியது பின்னர் தடிகளால் இவரைத் தாக்கி விட்டுப் பெற்ரோலை ஊற்றித் தீ வைத்தது

வலது சாரித் தீவிரவாதிகள் தான் இச்சம்பவத்துக்குக் காரணம் என்று எதிர்க்கட்சித் தலைவர்கள் குற்றம் சுமத்தினர்கள். (இ-எ)

## மக்கா, மதீனா பொதுச்சொத்து

### என்கிறது ஈரான்

தெஹ்ரான், ஆக. 6

மக்கா, மதீனா புனித தலங்களை இஸ்லாமியர்களுக்குரிய பொதுச்சொத்தாக மாற்றவேண்டும்; ஒருநாட்டின் சொத்தாக விடக்கூடாது,

இப்படி ஈரானிய ஆத்மீகத் தலைவர் ஆயதுல்லா கொமேனி அறிவித்துள்ளார்.

மக்கா புனித தலத்துக்கு இஸ்லாமிய நாடுகளில் இருந்து செல்லும் யாத்திரீகர்களுக்கு அந்த நாடுகளே பாதுகாப்பும் வழங்கவேண்டும் என்றும் ஆயதுல்லா கொமேனி கூறியுள்ளார். (இ-எ)

## நேபாளத்தில் 90 பேர் பலி!

காத்மண்டு, ஆக 7

வெள்ளம், மண் சரிவு காரணமாக நேபாளத்தில் 90 பேர் உயிரிழந்தனர். பலர் வீடிழந்தனர் (ஒ-எ)

## பாதுகாப்புச் சபை ஆராய்கிறது

நியூயார்க், ஆக 6

வளைகுடா யுத்த நிறுத்தம் பற்றிய தீர்மானத்தை மீறும் நாடுகள்மீது என்ன நடவடிக்கை எடுப்பது என்பதுபற்றி ஐ. நா. பாதுகாப்புச்சபை தற்போது ஆராய்ந்து வருகின்றது

சென்றமாதம் 20 ஆம் திகதி வளைகுடா யுத்த நிறுத்தம் பற்றிய தீர்மானத்தை ஐ. நா. பாதுகாப்புச்சபை எடுத்தது.

## சோவியத் விஜயம்

மாஸ்கோ, ஆக. 6

மொஸாம்பிக் ஜனாதிபதி ஜோக்கிம் செசனே சோவியத் யூனியனுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு இருக்கின்றார்.

செவ்வாய்க்கிழமை சோவியத் தலைவர் மிக்செய்ல் கோர்பச்சேவுடன் மொஸாம்பிக் ஜனாதிபதி இருதரப்பு உறவுகள் குறித்துப் பேச்சுக்கள் நடத்தினர்.

## திருப்பித் தாக்கும்

பாரிஸ், ஆக. 6

ஈரான் தாக்கினல் பிரான்ஸ் திருப்பித் தாக்கும்.

பிரேஞ்சுப் பிரதமர் ஜேக்ஸ் சிருக் முன்கண்டவாறு எச்சரித்தார்.

ஒளிபரப்பு நிலையம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இத்தகவலை பிரதமர் சிருக் வெளியிட்டார். (இ-எ)

# எமது இறைமையை விட்டுக் கொடோம்

# இரு வழிப்போராட்டமும் எமக்குத் தெரியும்

## செய்தியாளர் மாநாட்டில் பிரபா

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் நேற்று முன்தினம் திருநெல்வேலியில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் உள் நாட்டு வெளிநாட்டு செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி.

கேள்வி:- கிழக்கில் நடக்கும் சர்வஜன வாக்கெடுப்பை எதிர்ப்பீர்களா அல்லது அதில் போட்டியிட்டு வெல்வீர்களா?

பிரபா:-இணைப்பையே டில்லியில் வலியுறுத்தினேம், சர்வஜன வாக்கெடுப்பை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. வடக்கு கிழக்கு இணைப்பையே நாம் ஆதரிப்போம்.

கேள்வி:- கிழக்கு பிரிக்கப்பட்டால் நீங்கள் மீண்டும் ஆயுதம் ஏந்துவீர்களா?

நாளை நடப்பதை சிந்திக்கக் கூடிய ஆற்றல் எங்களுக்கு இல்லை நடப்பதைப் பொறுத்து முடிவெடுப்போம்.

கேள்வி:-ராஜீவ்காந்தி ஒரு உறுதி அளித்ததனலேயே ஆயுதங்களை ஒப்படைப்பதாக நேற்றுக் கூட்டத்தில் சொன்னீர்கள் அந்த உறுதி மொழி என்ன என்று கூற முடியுமா?

பிரபா:- தமிழ் மக்களுக்கு இனி ஒரு இன அழிவு வராது. வடக்கு. கிழக்கில் அவர்களுக்கு ஒரு பூரண பாதுகாப்பு வழங்கப்படும் என்ற உறுதிமொழியையே ராஜீவ் காந்தி வழங்கினர்,

கேள்வி:- உங்கள் 15 வருடகால போராட்டத்தில்இதுஒருபகுதி வெற்றி என நீங்கள் கருதுகிறீர்களா?

பிரபா:- ஒப்பந்தம் நிறைவேறும் பட்சத்திலேயே வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கவேண்டும். ஆனல் ஒப்பந்தத்தை ஏற்கவில்லை என்றே இதுவரை நாம் கூறி வருகிறோம்.

கேள்வி:- இந்த ஒப்பந்தத்தை ஏற்கும் படி நீங்கள் இந்திய அரசினல் நிர்ப்பந்திக்கப் பட்டீர்களா?

பிரபா:- இலங்கைக்கும் - இந்தியாவிற்கும் இடையிலான ஒப்பந்தம் இது. தமிழர்களுக்கும் இதற்கும் சம்பந்தமில்லை ஆகவே எம்மை நிர்ப்பந்திக்க இடமில்லை. நாம் எம்முடைய கருத்தைக் கூறி விட்டோம்!

கேள்வி:- நீங்கள் தொடர்ந்து என்ன செய்யப்போகிறீர்கள்?

பிரபா:- நான் பதவி எதையும் வகிக்க மாட்டேன் ஆனல் தொடர்ந்து இயக்கத்தை வழி நடத்துவேன், அரசியல் எதிலும் பங்கு கொள்ள மாட்டேன்.

கேள்வி:- எந்த வடிவிலான போராட்டத்திற்கும் நீங்கள் தலைமை வகிப்பீர்களா?

பிரபா:- நான் இயக்கத்தின் தலைவராக இருப்பேன். எந்தெந்த வடிவிலே போராட வேண்டியுள்ளதோ அந்தந்த வடிவிலே போராடுவேன்.

கேள்வி:- எதற்காக இந்த ஒப்பந்தத்தை ஏற்கிறீர்கள்?

பிரபா - நாம் என்றும் ஒப்பந்தத்தை ஏற்கவில்லை. எமது இறைமையை நாம் விட்டுக் கொடுக்கமாட்டோம். எமக்கு ஆயுதம்தான் தேவை என்று இல்லை. எமது மன உறுதியே எமக்குப் போதும்.

கேள்வி;- இதை ஏற்கவில்லை என்கிறீர்களே அதற்கு நீங்கள் கட்டுப்படவில்லையா?

பிரபா:- ஏற்காத ஒரு ஒப்பந்தத்திற்கு எப்படி நாம் கட்டுப்படுவோம்.

கேள்வி:- இந்தியா ஏன் இப்படி செய்கிறது?

பிரபா: இது அவர்களைக் கேட்கவேண்டிய கேள்வி.

கேள்வி:- இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைக்கப்போவதாகச் சொல்லப்பட்டுள்ளது. நீங்கள் பதவி எதையும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என சொல்லியிருக்கிறீர்கள் உங்கள் இயக்கம் இந்தப் பதவியை ஏற்றுக்கொள்ளுமா?

பிரபா:- எல்.ரி.ரி.ஈ. இடமே அந்தப்பதவி தற்பொழுது உள்ளது அதை மீண்டும் எல்.ரி.ரி.ஈ. இடம் கொடுத்தால் அவர்கள் அதை ஏற்றுக்கொள்வார்கள்.

கேள்வி:- இங்கும் ஒரு ஆப்கானிஸ்தான் தோன்றுமா?

பிரபா:- காலந்தான் பதில் சொல்லவேண்டும். நாளை அது தெரியும் அதுவரை பொறுத்திருங்கள்.

கேள்வி:- தமிழீழத்தை நீங்கள் எப்படி அடையப் போகிறீர்கள்?

பிரபா:- அந்தஉறுதி உண்டு. சந்தர்ப்பங்களில்எப்படி அமையுமோ அப்பொழுது பார்ப்போம்.

கேள்வி:- இந்தியா ஆயுதத்தைப் பறித்ததனல் நீங்கள் காந்தியாகி விட்டீர்களா?

பிரபா:- இரண்டு வழிப்போராட்டங்களும் எமக்குத் தெரியும் என்று தான் கூறுகின்றேன்.

கேள்வி: உங்களுக்குப் பாதுகாப்பாக வைத்திருக்கும் ஆயுதங்களை ஒப்படைப்பீர்களா?

பிரபா: இல்லை ஆனல் அந்த ஆயுதம் எமக்குத் தேவையில்லை; எமதுமன உறுதி எமக்குப்போதும்.

கேள்வி:- சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும் போது நீங்கள் அதைக் குழப்புவீர்களா?

பிரபா:- சர்வஜன வாக்கெடுப்பு நடந்தால் அது நடக்கும் போது சிந்திப்போம்.

கேள்வி:- ஒருவருடத்தினுள் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுமென திரு ராஜீவ்காந்தி உங்களுக்குத் தெரிவித்தாரா?

பிரபா:- ஒப்பந்தத்தின்படி ஒரு வருடத்தின் பின்பே வாக்கெடுப்பு நடைபெற வேண்டும்.

கேள்வி:- தமிழரசுக் கட்சியின் அஹிம்சைப் போராட்டம் சரிவராது என்றுதான் நீங்கள் ஆயுதம் ஏந்தினீர்கள் ஆனல் இப்பொழுது சொல்கிறீர்கள் அஹிம்சை வழியிலும் போராடலாம் என்று, ஒன்றுக்கொன்று உங்கள் கருத்து முரண்பாடாக உள்ளதே.

பிரபா:- இரண்டு வழிகளும் எமக்குத் தெரியும் என்று சொல்கிறேனே தவிர அஹிம்சையில் தான் போராட வேண்டும்என்று சொல்லவில்லையே மேலும் தமிழர் விடுதலைக் கூட்டணி

(4-ஆம் பக்கம் பார்க்க)

— தொகுப்பு: சண் ஜோன்சன் —

# தண்டமிழ்ப் பண்டிதன் சண்முகன்

**நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்**

கந்தன் செந்தமிழ்ச் செவ்வேள். அவன் திருவுடை முருகவேள் முருகு எனில் அழகு செந்தமிழ். திருச் செந்தூரில் தெற்கு நோக்கியே அருட்குமரன் இருக்கின்றான். தெற்கிலிருந்து நற்றமிழ்க் காற்று வீசுகின்றதன்றே.

தென்றல் வீசும் பொழில் செந்தில் வாழ் செந்தமிழ்ப் பெருமானே என்பது மருவா நெறி அளிக்கும் திருப்புகழ்.

சண்முகப் பெருமான் தண்டமிழ்ப் பண்டிதன். அவன் உருவமே வண்டமிழ், தென் தமிழ், செந்தமிழ் கந்தனில் ஒடுங்குகின்றது. சண்முகன் பரமேஸ்வரனின் மறுதோற்றமே அன்றி வேறொன்றுமில்லை. சிவபக்தனன சூரபன்மன் இல்லாவிடில், அல்லது அவனுடைய நான் என்னும் ஆணவம் இல்லாது நற்பண்புடன் இருந்து இருந்தால் இன்று நாம் கலியுக வரதனும் கந்தனை, குமரவேளை, கந்தனை புராணத்தைக் கண்டு இருக்கமுடியுமா? சூரபன்மன் தோன்றாவிடில் சண்முகன், சரவணப் பொய்கையிலே சர்வேஸ்வரனின் ஐம் பொறிகள் மூலம் உதிக்கமுடியுமா?

கருணை கூர்முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும்கொண்டே ஒரு திருமுருகன் உதித்தனன் உலகம் உய்ய. பகவத் கீதையில் கண்ணபிரான் உபதேசித்ததற்கு அமைய தர்மம் குன்றி அதர்மம் மேல் ஓங்கும் பொழுது தர்மநெறியைக் காக்க நான் அவதாரம் செய்வேன்'. இந்தத் தத்துவத்துக்கு அமைய முருகன் உதித்தான்.

தேவர்களை எல்லாம் சிறைவைத்து பிரம்மா, விஷ்ணு போன்றோரைத் துன்புறுத்தி ஆணவத்துடன் சிவபிரானிடம் பெற்ற வரத்தை அதர்ம வழியிலே துஷ்பிரயோகம் செய்தான். இதைத் தாங்கமுடியாத தேவர்கள் பார்வதியிடம் முறையிட பார்வதி சர்வேஸ்வரனை [illegible] யாக தக்ஷிணாமூர்த்தியாக தியான நிலையில் அமைந்து விட்ட வேளை— இந்த மோனநிலையை நீடிக்கவிடாது – உலக மாதாவாகிய பார்வதி அன்பு மயமாக ஈசனைப் பார்த்தாள்.

கரும்பு வில்லும் புஷ்ப பாணங்களும், அன்பு பொங்கும் கண்கள் கொண்ட இந்த கோலத்திற்குத்தான் 'காமாட்சி' என்ற பெயரும் அமைந்தது. பரமேஸ்வரன் விழித்துப் பார்வதியின் குறைகளைக் கேட்டு உடனே நெற்றிக் கண்ணைத் திறந்து ஒருதிரு முருகன் வந்து உதிக்க உறுதுணை புரிந்தார் பரமேஸ்வரனின் ஐம்பொறிகள் சரவணப் பொய்கையில் தோன்றி ஆறுமுகன் ஆனைமுகனின் தம்பியாக தெய்வ [illegible] தேவர்கள் துயர்துடைக்க திரு அவதாரம் செய்தார்.★

- ஆ. அருள்துரை -

**சமய சந்நிதிகளில்**

## அனலைதீவில் தேர்த்திருவிழா

அனலைதீவு, ஆக.7

அருள்மிகு அனலைதீவு ஐயனர் கோயில் தேர்த் திருவிழா நாளை சனிக்கிழமை நடைபெறுகின்றது. மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவம் நடைபெறும்.

நூற்றுக்குநூறு சைவ மக்கள் வாழும் சிறப்புப் பெற்ற இடம் அனலைதீவு.

அனலை ஐயனரின் வரலாறு சிறப்புமிக்கது. (இ-எ)

**பொய்யாமொழி**



**குறள்:**

அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று

**பொருள்:**

சுற்றத்தாரோடு மனம் கலந்து பழகும் தன்மை இல்லாதவனுடைய வாழ்க்கை, குளப்பரப்பானது கரையில்லாமல் நீர் நிறைந்தாற் போன்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை மின்சார சபையினதும்
யாழ் அபிவிருத்திச் சபையினதும்
பிரமாணங்களுக்கேற்ப கொங்கிறீட்
மின்கம்பங்களை இங்கும் விற்பனைசெய்கிறோம்,
கிளை:-
**ஐலன்ட் எலக்றிக்கல்ஸ்**
பத்திரைப்பிட்டி ஒழுங்கை,
கரம்பன் கிழக்கு — ஊர்காவற்றுறை.



# உதயன்

07 - 08 - 1987 வெள்ளிக்கிழமை



யாழ் அபிவிருத்திச்சபை உபஅலுவலகங்களில்
மின்சாரம் கோரி விண்ணப்பிக்கும் மக்களுக்கு
● கொன்கிறீட் மின்கம்பங்களை ●
தரமான முறையில் தயாரித்து
விற்பனை செய்கிறோம்,
தொடர்பு கொள்ளவும்;
**ஐலன்ட் எலக்றிக்கல்ஸ்**
நாவலடி ஒழுங்கை.
திருநெல்வேலி மேற்கு, — யாழ்ப்பாணம்


# வடக்கு - கிழக்கிற்கு இடைக்கால நிர்வாகம்

கொழும்பு, ஆக 7

உத்தேச மாகாண சபைக்கான தேர்தல் நடைபெறும் வரை வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு என்று இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது

ஜனாதிபதி ஜெயவர்த்தன இது சம்பந்தமாக கொள்கை அளவில் ஒப்புக்கொண்டிருப்பதாக கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

இது பற்றிய விவரங்கள் ஓரிரு நாட்களில் வெளியிடப்படும் என்று கொழும்பில் விஷயம் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் இடைக்கால நிர்வாகம் பற்றி திட்டவட்டமாகச் சொல்லப்படாவிட்டாலும் இது ஒப்பந்தத்தின் ஒரு பகுதியே என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன

இடைக்கால நிர்வாகத்தை மேற்கொள்ள மூன்று சிவில் நிர்வாகிகள் இருப்பர்.

இவர்களுக்கு ஆலோசனை வழங்க ஒரு சபை நியமிக்கப்படும். அந்த சபையில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அங்கம் வகிப்பர்.

இவர்களை ஜனாதிபதி நியமிப்பார்.

## ஆணைக்குழு நியமிக்கப்படும்

கொழும்பு, ஆக. 7

கடந்தவாரம் தென் இலங்கையில் இடம்பெற்ற வன்செயல்கள் பற்றி விசாரணை நடத்த ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படும்.

குற்றவாளிகளாகக் காணப்படுவோர் கடுமையான தண்டனைக்கு உள்ளாவர்.

இத்தகவலை அரச எம். பி. ஜோன் அமரதுங்க (லத்தன) வெளியிட்டார். (உ-எ)

## காரைநகர் போக்குவரத்து

வேலணை, ஆக 7

நீண்ட இடைவெளிக்கு பின்னர் ஊர்காவற்றுறை- காரைநகர் கடற்பாதை போக்குவரத்துக்காக மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

இதனால் ஏராளமான பொதுமக்கள் இப்பாதையினூடாக சென்றுவருவதை காணகூடியதாக இருக்கிறது

இதனால் ஊர்காவற்றுறை நகரம் வழமைக்கு திரும்பியுள்ளதுடன் நகரத்திலுள்ள பல கடைகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

சேதமடைந்த கடைகள் திருத்தப்பட்டும் வருகின்றன, (இ - 167)

## தாயார் மன்னிப்புக் கேட்கிறார்

கொழும்பு, ஆக 7

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைத் தாக்கிய இலங்கைக் கடற்படைச் சிப்பாய் மேல்விசாரணைக்காக புதுடில்லி கொண்டுசெல்லப்படுவார் என்ற செய்தி தவறு

இப்படி இந்தியத் தூதர் ஜே என். டிக்ஸிற் தெரிவித்தார்.

மகன் செய்த செயலுக்காக மன்னிப்புக் கோரிய தாயாரிடம் இதனை திரு. டிக்ஸிற் தெரிவித்தார்.

மன்னிப்புக் கேட்டு பிரதமருக்கு எழுதிய கடிதத்தையும் தாயார் திருமதி நந்தாவதி மென்டிஸ் இந்தியத் தூதரிடம் கையளித்தார்.

"நானும் ஐந்து குழந்தைகளின் தந்தை. உங்கள் உணர்ச்சிகளை விளங்கிக் கொள்ள முடிகின்றது"— இப்படி திரு. டிக்ஸிற் தெரிவித்தார்.

## உண்ணாவிரதத்தை கைவிட்டனர்

லண்டன், ஆக 7

பிரிட்டனில் தங்க அனுமதிக்கும்படி கோரி உண்ணாவிரதமிருந்த 60 இலங்கைத் தமிழர் அதனை கடந்த புதன்கிழமை கைவிட்டனர்.

ஐந்து தினங்களாக அவர்கள் இங்கிலாந்தின் கிழக்குக் கரையோரத்தில் நிறுத்தப்பட்டுள்ள கப்பல் ஒன்றில் உண்ணாவிரதம் இருந்து வந்தனர்.

சட்ட விரோதமாக நுழைய முயற்சிக்கையில் இவர்கள் கைது செய்யப்பட்டுப் பின்னர் கப்பலில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

உண்ணாவிரதம் கைவிட்ட பின்னர், அவர்களின் சார்பில் பேச்சாளர் ஒருவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில், இலங்கையில் நிலவிய அபாயநிலை நீங்கிவிட்டது போல் தெரிகிறது

எவ்வளவு விரைவாக நாம் தாயகம் திரும்புவோமோ அவ்வளவு விரைவாகத் திரும்பிவிடுவோம்- என்றார். (இ-எ)

## வரலட்சுமி விரதம்

யாழ்ப்பாணம், ஆக. 7

இணுவில் வட்டுவினி கண்ணகா பரமேஸ்வரி ஆலயத்தில் இன்று வெள்ளி மாலை 5-30மணியளவில் வரலட்சுமி விரதம் இடம்பெறும்

பூசை முடிந்தவுடன் அனைவருக்கும் நோன்பு நூல் வழங்கப்படும். (இ-எ)

## நீடிப்பு

1987 ஆகஸ்ட் மாத பருவகாலசீட்டுவிற்பனை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருப்பதாக வ. பி போ. ச வின் யாழ்சாலை முகாமையாளர் திரு. வி எஸ். சொக்கலிங்கம் அறிவித்திருக்கிறார். (உ)

# உமா உட்பட 4 பேருக்கு ஆயுட்காலச் சிறை!

கொழும்பு, ஆக 7

கிளிநொச்சி மக்கள் வங்கிக் கொள்ளை வழக்கில் புளொட் தலைவர் உமாமகேஸ்வரன் உட்பட நான்கு பேருக்கு ஆயுட்காலச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு எச். டபிள்யு சேனநாயக்கா கடந்த புதன்கிழமை இத்தீர்ப்பை வழங்கினார்.

இவ்வழக்கில் பதினொரு பேர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

விசாரணைக்கு வழக்கு எடுக்கப்பட்ட சமயம் ஆறு எதிரிகள் இறந்துவிட்டனர் என்று அறிவிக்கப்பட்டது

மிகுதி 5 எதிரிகள் மீதான விசாரணையே நடைபெற்றது 5 எதிரிகளும் நீதிமன்றத்துக்குச் சமுகமளிக்கவில்லை.

விசாரணை முடிவில் சாட்சியம் போதாமையால் சின்னத்தம்பி கணேசலிங்கம் என்பவர் விடுவிக்கப்பட்டார்.

ஏனைய நான்கு எதிரிகளான உமாமகேஸ்வரன், சிறிதரன் (டிராக்டர் ஸ்ரீ), ஞானப்பிரகாசம் ஞானசேகரம், நஷிந்தாராஜா முருகேசபிள்ளை, மாணிக்கராஜன் தாஸன் ஆகியோருக்கு ஆயுட்காலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

1981 ஜனவரி 1ஆம் திகதிக்கும் 1981அக்டோபர் 25ஆம் திகதிக்கும் இடையில் வங்கியில் 2 கோடி 70லட்சம் ரூபாவைக் கொள்ளை அடித்தது. இராணுவச் சிப்பாய் விஜயவீராவைக் கொலை செய்தது- ஆகிய குற்றச்சாட்டுக்கள் இவர்கள் மீது சுமத்தப்பட்டிருந்தன. (உ-எ)

# சிமெந்து ஆலைகள் விரைவில் இயங்கும்

யாழ்ப்பாணம், ஆக 7

காங்கேசன்துறையில் உள்ள சிமெந்து ஆலைகள் விரைவில் இயங்க உள்ளன.

இராணுவத்தின் கெடுபிடிகள் காரணமாக கடந்த சிலமாதங்களாக காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை, லங்கா சிமெந்து லிமிட்டெட் ஆகியவை இயங்காமல் முடங்கிக் கிடந்தன

அண்மையில் இந்திய இராணுவம் இங்கு வந்ததை அடுத்து ஸ்ரீலங்கா இராணுவம் வெளியேறி உள்ளது.

சிமெந்துத் தொழிற்சாலையின் பல கட்டடங்கள் சேதமடைந்த நிலையில் இருக்கின்றன என்று தெரிவிக்கப்படுகிறது

இவற்றைப் பார்வையிடுவதற்காக லங்கா சிமெந்து லிமிட்டெட் பொது முகாமையாளர் திரு ஜெபமானவும், மற்றும் பல அதிகாரிகளும் இன்று சிமெந்துத் தொழிற்சாலைக்கு விஜயம் செய்கின்றனர்.

சேதமடைந்த சட்டடங்கள் திருத்தி அமைக்கப்பட்டு ஓரிரு வாரங்களில் சிமெந்து உற்பத்தி ஆரம்பிக்கப்படுமென தொழிற்சாலையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-7)

## அத்துலத்துக்கு....

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டார்.

சமாதானத் தீர்வு வந்து விட்டது கடந்த காலத்தை மறந்து, இணைந்து ஒருவரை ஒருவர் புரிந்து வாழ வேண்டும்— இப்படி அமைச்சர் மேலும் சொன்னார். (இ-எ)

## ஸ்ரீலங்கா...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

யினரால் பயணிகள் தாக்கப்பட்டும் வருகின்றனர்

இதேசமயம் ஸ்ரீலங்கா இராணுவப் படையினர் இப்போதும் ஆயுதபாணிகளாக ஊருக்குள் தாராளமாக நடமாடி வருவது பொதுமககள் மத்தியில் தொடர்ந்து பீதியை ஏற்படுத்தி வருகின்றது.

ஏனைய முகாம்கள் பல வற்றைப் பொறுப்பேற்று இராணுவக் கெடுபிடிகளைத் தளர்த்த நடவடிக்கை எடுத்துவரும் இந்திய சமாதானப் படை தீவுப் பகுதியிலும் தமது கவனத்தைச் செலுத்தவேண்டும் என இப் பகுதிப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

நெடுந்தீவு குமுதினிப் படகில் பயணம் செய்தவர்கள் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டமை —

1986 மார்ச் முற்பகுதியில் நயினாதீவுக் கடலில் இடம்பெற்ற கடற்கண்ணிவெடிச் சம்பவத்தை அடுத்து பல அப்பாவி மக்கள் கொலை செய்யப்பட்டமை —

வரலாற்றுப் பெருமை வாய்ந்த நாகபூஷணிஅம்மன் ஆலயத்தின் கலைச் செல்வங்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டமை —

ஆகிய சம்பவங்களினால் இப்பகுதி மக்கள் இந்த முகாம் குறித்து பீதியடைந்திருக்கின்றனர். (உ)

## நிராயுத---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ப்பு கோரிக்கை விடுத்திருக்கிறது.

4ஆம் திகதி பிற்பகல் எமது தோழர் தேவதாஸ் (மன்னார் பிராந்திய படைத்துறை ஆணையாளர்), தோழர் செந்தில் குகன் ஆகியோர் நிராயுதபாணிகளாக பூநகரி வழியாகச் சென்று கொண்டிருந்த வேளையில் மறைந்து நின்ற பூநகரி 4 ஆம் கட்டை ஸ்ரீலங்கா இராணுவத்தால் வழிமறிக்கப்பட்டனர்.

வாளால் வெட்டப்பட்டு, ஜீப்பில் கட்டி இழுத்துச் செல்லப்பட்டனர்.

இதன்பின் இவர்கள் கொல்லப் பட்டதாகவும் இருவரது உடல்களையும் முகாம் வழியாக சென்றவர்களது பார்வைக்கு விட்டுள்ளதாகவும் அறியப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக இந்தியச் சமாதானப்படை உயர் அதிகாரிகள்மூலம் விசாரித்தபோதும் பலன் ஏதும் கிடைக்கவில்லை.

இச் சம்பவத்திலிருந்து அமைதி நிலையைக் குலைக்கும் நடவடிக்கைகளில் ஸ்ரீ லங்கா அரசு இறங்கிவிட்டமை தெளிவாகிறது.

—இப்படி ஈரோஸ் தெரிவித்திருக்கிறது (உ)

## பிரதமர் ஏன் கலந்து கொள்ளவில்லை

கொழும்பு. ஆக. 7

இந்திய —இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திட்ட வைபவத்தில் பிரதமர் பிரேமதாஸ ஏன் கலந்து கொள்ளவில்லை?

ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் செயலாளர் திரு. டபிள்யு எம். பி. பீ மெனிக்திவல இதற்கான பதிலை பொரளையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த கருத்தரங்கில் தெரிவித்தார்.

பிரதமர் ஏன் கலந்து கொள்ளவில்லை என்ற கேள்வியை தேரர் ஒருவர் எழுப்பினார்

திரு. மெனிக்திவல சொன்னதாவது:

இந்திய—இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடும் வைபவம் அவசரமாக ஒழுங்கு செய்யப்பட்டது.

அன்றையதினம் பிரதமர் பிரேமதாஸ தனது வீட்டில் 'பின்கம' சமய நிகழ்ச்சி ஒன்றை ஒழுங்கு செய்து விட்டார். அதனால்தான் பிரதமர், ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் வைபவத்தில் கலந்து கொள்ள முடியாமல் போய்விட்டது.

இப்படி திரு. மெனிக்திவல சொன்னார். (இ-எ)

## போலியோ தடுப்பூசி போடுங்கள்

யாழ்ப்பாணம், ஆக.7

போலியோ நோய் எமது பகுதிகளில் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளதால் உடனடியாக பிள்ளைகளுக்கு தடுப்பு மருந்து கொடுங்கள்.

இவ்வாறு தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி கேட்டுள்ளார். (இ-7)

## திருமலையில் 7 இந்திய கப்பல்கள்

திருகோணமலைத்துறை முகத்தில் இந்தியக் கடற்படையின் ஏழு கடலோரக் காவல் கப்பல்கள் நங்கூரமிட்டுள்ளன.

ஹெலிக்கொப்டர்களைக் கொண்டு செல்லக் கூடிய கப்பல்கள் இவை

கனரக இராணுவ வாகனங்கள் இக்கப்பல்களில் வந்திறங்கின

இவற்றில் பெரும்பாலானவைவடக்குநோக்கி புதன்கிழமை வந்து கொண்டிருந்தன

இந்திய இராணுவத்தினர் சிலர் திருமலையில் உள்ள சில இராணுவ முகாம்களில் தங்கியுள்ளனர் (இ-எ)

## சிமெந்து ஆலை பொருள்கள் களவு

யாழ்ப்பாணம், ஆக. 7

காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை வளவுக்குள் இருந்த பெறுமதியான பொருள்கள் பல களவாடப்பட்டுள்ளன

சிமெந்துத் தொழிற்சாலைக்கு சொந்தமான குளிர்சாதனப்பெட்டி, சைக்கிள்கள், கிடாரங்கள் போன்றவையும்—

தொழிற்சாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்களின் விடுதிகளில் இருந்த ரி. வி. குளிர்சாதனப் பெட்டிகள், கதிரை, மேசைகள் போன்றவையுமே காணாமற் போய் உள்ளன.

### வெளியேற்றம்

யாழ் கோட்டை இராணுவ முகாமில் இருந்த ஸ்ரீ லங்கா சிப்பாய்கள் ஹெலிக்கொப்டர் மூலம் பலாலிக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

கோட்டை முகாமுக்குள் ஹெலிக்கொப்டர்கள் இறங்கி அவர்களை ஏற்றிச் சென்றன.

# இணைப்பை எதிர்த்து திருமலையில் சுவரொட்டி

திருகோணமலை, ஆக 7

வடக்கு, கிழக்கு இணைப்புக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் சுவரொட்டிகள் திருகோணமலை நகரெங்கும் ஒட்டப்பட்டுள்ளன.

சிங்கள மொழியில் இச் சுவரொட்டிகள் எழுதப்பட்டுள்ளன.

வடக்கு-கிழக்கு இணைக்கப்பட்டால் சிங்களவர்கள் பயங்கரவாதிகளாக மாறுவார்கள். இப்படி சுவரொட்டிகளில் எழுதப்பட்டுள்ளன.

வடக்கு-கிழக்கு மீண்டும் ஸ்ரீலங்கா ராணுவத்திடம் ஒப்படைக்க வேண்டும் இவ்வாறு கூறும் சுவரொட்டிகளும ஒட்டப்பட்டுள்ளன. (உ - எ-150)

ஒப்பந்தம் குறித்து

# அமைச்சர்களின் ஆலோசனை பெறப்படும்

கொழும்பு, ஆக. 7

இந்திய-இலங்கை ஒப்பந்தம் பற்றிய ஆலோசனைகளை ஒருவார காலத்தினுள் எழுத்து மூலம் தருமாறு ஜனாதிபதி ஜெயவர்த்தன அமைச்சர்களைக் கேட்டிருக்கின்றார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி, அமைச்சர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர்களிடம் ஒப்பந்தப் பிரதிகளை ஜனாதிபதி கூட்டத்தில் வைத்து வழங்கினார்.

ஒப்பந்தத்தைக் கவனமாகப் படித்து ஆலோசனைகளைத் தெரிவிப்பதாக அமைச்சர்கள் தெரிவித்தனராம்.

அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமர் பிரேமதாஸ உட்பட முக்கிய அமைச்சர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இதனிடையில் ஒப்பந்தத்தில் கூறப்பட்ட வடக்கு-கிழக்கு இணைப்பு மற்றும் சில விஷயங்கள் குறித்து சில அமைச்சர்கள் அதிருப்தி தெரிவித்தனர் என்று அறியப்படுகின்றது. (இ-எ)

## பூஸாக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பூஸாவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

பூஸாவில் மொத்தமாக சுமார் 3 ஆயிரத்து 800 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (இ-எ)

# எமது இறைமையை....

(3- பக்கத் தொடர்ச்சி)

சிங்கள மக்களுடன்தான் அஹிம்சைப் போராட்டம் நடத்தியது. நான் இந்திய மக்களுடன் அஹிம்சைப் போராட்டம நடத்தினேன். இதை எல்லாம் குழப்பிக் கொண்டு சிங்கள மக்கள் இனக்கலவரத்தில் இறங்கினால் அவர்களுக்செதிராக பிரபாகரன் துவக்குத்தான் தூக்கவேண்டியிருக்கும்.

கேள்வி:- விடுதலைப் புலிகளில் எத்தனை பேர் ஆயுதம் வைத்திருக்கிறார்கள்?

பிரபா:- இனிமேல் தான் அதை நாங்கள் கணக்கெடுக்க வேண்டும் நான் வந்ததில் இருந்து எமது உறுப்பினர்களைக் கூட சந்திக்க முடியாத நிலையில் இருக்கிறேன்.

கேள்வி:- எவ்வளவு ஆயுதங்கள் உங்களிடம் இருக்கின்றன?

பிரபா:- சரியாகத் தெரியாது.

கேள்வி:- அண்ணளவாகவாவது எவ்வளவு என்று தெரியும் தானே?

பிரபா:- இன்று பிற்பகல் ஆயுதங்களை ஒப்படைக்கும்போது உங்களுக்குத் தெரியும்

கேள்வி:- எத்தனை உறுப்பினர்கள் ஆயுதம் ஏந்தக் கூடியவர்கள்?

பிரபா: அது எமது இராணுவ இரகசியம்

கேள்வி: திரு. எம். ஜி ராமச்சந்திரன் உங்கள் ஆதரவாளரும் நண்பருமாக இருந்தவர், அவரும் இந்த ஒப்பந்தத்திற்கு ஆதரவு அளித்திருக்கிறாரே?

பிரபா:- அவர் இந்திய மத்திய அரசுக்கு கட்டுப்பட்டவர்.

கேள்வி:- தமிழீழத்துக்கென ஆதரவும் உதவியும் செய்த அவர் இதனைப்பற்றி கவலைப்பட்டாரா?

பிரபா:- அவர் ஒன்றும் சொல்லவில்லை.

கேள்வி: உங்கள் இயக்கத்தின் எல்லா அங்கத்தவர்களும் ஆயுதங்களை கையளிப்பார்களா?

பிரபா:- அதுதான் உண்மை.

(வளரும்)


யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் உள்ள

**உதயன் — சஞ்சீவி**

**விற்பனையாளர்களுக்கு ஒரு**

# நற்செய்தி

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் உதயன், சஞ்சீவி பத்திரிகைகளின் விநியோகத்தைச் சீர்செய்யும் முகமாக எமது மாநகர சபை எல்லைக்குள்ளான விநியோகத்தை 'அருண்மார்க்கட்டிங் சேவிஸர்ஸ்'ஸ்தாபனத்தாரிடம் ஒப்படைத்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம். யாழ் மாநகரசபை எல்லைக்குள் உதயன் விற்பனையாளர்களாக விரும்புவோர் ஆகஸ்ட் மாதம் 7, 8. 9-ம் திகதிகளில் காலை 8-30 மணிக்கும் பிற்பகல் 3-00 மணிக்கும் இடையில் கீழ்க்கண்ட விலாசத்துடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

முகாமையாளர்
**அருண் மார்க்கட்டிங் சேவிஸர்ஸ்**
15 2-ஆம் ஒழுங்கை
மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் உள்ள எமது தற்போதைய விற்பனையாளர்களும், முகவர்களும் அருண் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகி
உதயன் பப்ளிகேஷன்ஸ் பிறைவேட் லிமிட்



# யாழ். குடா வர்த்தக சேவை நிலையங்களின் தொகுப்பு

யாழ். குடாநாட்டில் உள்ள மொத்த சில்லறை வியாபாரிகள் மற்றும் வெவ்வேறு இடங்களில் தங்கள் தொழில் ஸ்தாபனங்களைவைத்திருப்பவர்கள்உ-ம்:டாக்டர்கள்,வழக்கறிஞர்கள்,பிரயாணமுகவர்,சோதிடர், சுட்டடவேலை, இரும்பு, மரவேலைகள், விடுதிகள் இன்னும் பல விதமான சேவைகளையும் செய்கின்றவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம். நாங்கள் தொகுக்கும் மேற்படி பிரசுரத்தில் உங்களையும் மிகவும் சொற்பமான செலவில் அறிமுகப்படுத்தி வியாபாரத்தைப் பெருக்கிக்கொள்ளுங்கள். மேலதிக விபரங்கட்கு முத்திரை ஒட்டிய விலாசமிடப்பட்ட கவருடன் விளம்பரதாரர், 360, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு எழுதுங்கள். (1452)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 07-08-1987

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. at 292/2 Navalar Road, Jaffna on Friday August 07, 1987.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org